*கவனிக்க.-2020.07.24 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2187 - 2020 ජූලි මස 31 වැනි සිකුරාදා - 2020.07.31**

*2187 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 31 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | *826* |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2020, ஓகத்து மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2020, ஓகத்து மாதம் 07 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

823-B 82044-5,403 (2020/ 07)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

*1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.*

*1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).*

*1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.*

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

*2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.*

*2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.*

*அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.*

*2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலூவது சேவையாற்றும்படி கேட்கப்படலூம்.*

***3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :***

*3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-*

*3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.*

*3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.*

*3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.*

*3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.*

*3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.*

*3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.*

*3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.*

*3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.*

***4. பணிக்கமர்த்தும் நியதிகள் :***

*4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.*

*4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.*

*4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.*

*4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.*

***5. யுத்த சேவைச் சலுகை :***

*5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.*

***6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :***

*6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.*

*6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலூம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.*

*6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.*

*6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.*

*6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

***7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :***

*7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.*

***8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :***

*இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.*

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கை புகையிரத திணைக்களத்தின் புகையிரத நிலைய அதிபர் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான திறந்த எழுத்துமூலப் போட்டிப் பரீட்சை - 2019 (2020)

*இலங்கை புகையிரத திணைக்களத்தின் புகையிரத நிலைய அதிபர் தரத்தின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக 2020.08.31 ஆந் திகதி 18 வயதுக்கு குறையாததும் 30 வயதுக்கு கூடாததுமான இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (அதன்படி விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளமுடிவது 2002.08.31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு மற்றும் 1990.08.31 ஆந் திகதி அல்லது அதற்கு பின்பு பிறந்த திகதியையுடையவர்களுக்கு மாத்திரமாகும்) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 2020.08.31 ஆகும். சகல விண்ணப்பப் பத்திரங்களும் அத்தினத்திற்கு முன்பு "பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைத் திணைக்களம், திட்டமிடல் மற்றும் வெளிநாட்டு பரீட்சை கிளை, த. பெ. இல. 1503, கொழும்பு" எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். எந்த விண்ணப்பப் பத்திரமாவது தனிப்பட்ட பெயருக்கோ கையில் கொண்டு சென்று கையளிக்கவோ கூடாது. பூரணமற்ற, முறையற்ற, தேவையான தராதரங்களை கொண்டிராத முறைப்படி பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படாத, தாமதமாகிக் கிடைக்கும் விண்ணப்பப் பத்திரங்கள் எவ் அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் உள்ளவர்கள் தங்களது விண்ணப்பப் பத்திரங்களை குறிப்பிட்ட தினத்திற்கு முன்பு தமது திணைக்கள பிரதானியினூடாக அனுப்பி வைத்தல் வேண்டும். இப்பரீட்சையை நடாத்துவதற்காக பரீட்சை நிலையம் அமைப்பதற்கு எதிர்பார்க்கப்படும் நகரங்களும் அதன் இலக்கங்களும் 1 ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. விண்ணப்பப் பத்திரத்தின் தலைப்பில் இந் நகரத்தையும் அதன் இலக்கத்தையும் தேர்ந்தெடுத்து பூரணப்படுத்தப்படல் வேண்டும். இத் தேர்ந்தெடுப்பை பின்பு மாற்றம் செய்ய இடமளிக்கப்படமாட்டாது. இருந்தும் பரீட்சை நிலையம் ஒன்றை அமைப்பதற்கு போதுமானளவு விண்ணப்பதாரிகள் தொகையை கொண்டிராத நகரங்களின் விண்ணப்பதாரிகள் கிட்டிய ஏனைய பரீட்சை நிலையத்திற்கு அனுப்பப்படுவர். குறித்த நகரங்கள் சகலதிலும் அல்லது கூடுதலான இடங்களில் பரீட்சை நிலையம் அமைப்பதற்கு போதுமானளவு விண்ணப்பதாரிகள் தொகை விண்ணப்பிக்காதவிடத்து பரீட்சை கொழும்பில் மாத்திரம் நடாத்துவதற்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**1 ஆம் அட்டவணை**

*பரீட்சை நிலையம் அமையப் பெறும் நகரங்களும் அதன் இலக்கங்களும்*

| *நகரம்* | *நகர இலக்கம்* |
|---|---|
| கொழும்பு | 01 |
| கம்பஹா | 02 |
| களுத்துறை | 03 |
| கண்டி | 04 |
| மாத்தளை | 05 |
| நுவரஎலிய | 06 |
| காலி | 07 |
| மாத்தறை | 08 |
| அம்பாந்தோட்டை | 09 |
| யாழ்ப்பாணம் | 10 |
| மன்னார் | 11 |
| வவுனியா | 12 |
| முல்லைத்தீவு | 13 |
| கிளிநொச்சி | 14 |
| மட்டக்களப்பு | 15 |
| அம்பாறை | 16 |
| திருகோணமலை | 17 |
| குருநாகல் | 18 |
| புத்தளம் | 19 |
| அனுராதபுரம் | 20 |
| பொலன்னறுவை | 21 |
| பதுளை | 22 |
| மொனராகலை | 23 |
| இரத்தினபுரி | 24 |
| கேகாலை | 25 |

02. **விண்ணப்பம் கோரப்படும் பதவி**.- புகையிரத நிலைய அதிபர் - தரம் III

03. **பதவியின் கடமையின் தன்மை**.- இலங்கைப் புகையிரத திணைக்களத்தின் கீழுள்ள புகையிரத நிலையங்களின் செயற்பாடுகளுக்கு ஏற்புடைய புகையிரத முகாமையாளரின் பிரதிநிதியாக செயற்பட்டு புகையிரத முகாமையாளரினால் குறிப்பாக ஒப்படைக்கப்படும் ஆள் நிருவாகம் நிதி, வாணிப நடவடிக்கை கூட்டிணைப்புச் செயற்பாடு, இயக்க நடவடிக்கை, பிரவேசப் பத்திரமும் அதன் கணக்கீடுகளும் உள்ளடங்கலாக பலதரப்பட்ட சொரூபங்களையுடைய கடமைகளையும் மேற்பார்வையையும் மேற்கொள்ளும் சேவைத் தரமாகும்.

04. **சம்பள அளவுத்திட்டம்**.- புகையிரத நிலைய அதிபர் - தரம் III ஆம் தரத்திற்கான சம்பள அளவுத்திட்டம் (அ. நி. சு. 03/2016) ரூபா 34,130 - 5 × 495 - 5 × 240 - 11 × 575 - 10 × 720 - 10 × 745 - ரூபா 54,130.

05. (அ) **கல்வித் தராதரம்**.-

(i) சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம் உடன் கணிதம் மற்றும் வேறு விடயங்கள் இரண்டில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் க. பொ. த. (சா./தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

உடன்

(ii) க. பொ. த. (உ./ தர) பரீட்சையில் மூன்று விடயங்களில் (03) (பொதுவான பொது பரீட்சை தவிர்ந்த) ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல். (பழைய விடய சிபாரிசின் கீழ் மூன்று (03) விடயங்களிலும் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.)

(ஆ) **உடற் தகுதி**.-

(i) சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எப்பிரதேசத்திலும் சேவை புரிவதற்கான சிறந்த உடற் தகுதிகளையும் பெற்றிருத்தல் வேண்டும்.

(ii) பதவியின் கடமைகளை மேற்கொள்ளக் கூடியளவுக்கு போதுமான உடற் தகுதிகளையும் உளத் தகுதியையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(iii) உயரம் 05 அடி 04 அங்குலத்திற்கு குறையாமலும், நெஞ்சளவு 32 அங்குலத்திற்கு குறையாமலும் இருத்தல் வேண்டும்.

(iv) 6/6 அளவுள்ள கண்பார்வை பரிசோதனையிலும் தகுதி பெறல் வேண்டும்.

(இ) **வேறு தராதரங்கள்**.-

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரி சிறந்த குணநலமுடையவராக இருத்தல் வேண்டும்.

(iii) ஆண் விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.

**குறிப்பு**.- விண்ணப்பதாரி இவ்வறிவித்தல் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் தினத்தன்று சகல தகுதிகளையும் பெற்றிருத்தல் வேண்டும்.

06. **ஆட்சேர்ப்பு செய்யும் முறை**.- மேலுள்ள பந்தியில் (பந்தி 05 இல்) குறிப்பிடப்பட்டுள்ள தராதரங்களை கொண்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு திறந்த எழுத்து மூலப் போட்டிப் பரீட்சை நடாத்தி விண்ணப்பதாரிகள் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் திறமையின் ஒழுங்கு வரிசையின் அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

07. **ஆட்சேர்ப்பு செய்யும் பரீட்சையின் உள்ளடக்கம்** :

(i) இப் பரீட்சை பரீட்சைகள் ஆணையாளரினால் நடாத்தப்படும்.

(ii) பரீட்சை முறை.-

(அ) பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் போன்ற மொழிகளில் நடாத்தப்படும்.

(ஆ) சகல வினாப்பத்திரங்களுக்கும் மேற்குறிப்பிட்ட (05) இன் கீழ் தகுதி பெற்றுள்ள மொழி மூலமே தோற்ற வேண்டும். தேர்ந்தெடுத்தமொழி மூலத்தை பின்பு மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்படாது.

(iii) பரீட்சை விடயங்கள்.-

(அ) மொழித்தேர்ச்சி

(ஆ) நுண்ணறிவு

(iv) விடய உள்ளடக்கம்.-

(அ) மொழித்தேர்ச்சி

காலம் : 01 மணி 30 நிமிடம் முழுப் புள்ளி 100 ஆகும்.

இக் கேள்வித்தாள் இரு பிரிவுகளை கொண்டுள்ளதுடன் ஒவ்வொரு பிரிவுக்கும் சமமான புள்ளிகள் வழங்கப்படும். சகல கேள்விகளுக்கும் விடையளித்தல் வேண்டும்.

i. ஆம் பிரிவு .-
இப்பிரிவில் கட்டுரையும் சுருக்கமும் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

ii. ஆம் பிரிவு .-
மொழி பற்றி விண்ணப்பதாரியின் புரிந்து கொள்ளுதலை பரிசீலிக்கும் பொருட்டு அம்சங்கள் பலவற்றைக் கொண்டு இரண்டாம் பிரிவு உள்ளடக்கப்பட்டிருக்கும். இவ்வம்சங்கள் வாயிலாக கீழ் கோடிடப்பட்டுள்ள சொற்களின் கருத்தை தனி வாக்கியத்தில் கூறுமாறு அல்லது அது பற்றி விரிவான குறிப்பு எழுதுமாறு அல்லது வழங்கப்பட்டுள்ள கேள்விக்கு தரப்பட்டுள்ள விடைகளின் மத்தியில் மிகச் சரியான விடையை தேர்ந்தெடுக்குமாறு விண்ணப்பதாரிகள் வேண்டப்படுவார்கள்.

(ஆ) நுண்ணறிவு.-
காலம் : 01 மணி 30 நிமிடம் முழுப் புள்ளி 100 ஆகும்.
விண்ணப்பதாரியின் தர்க்க ரீதியான ஆற்றலையும் விவரிக்கும் ஆற்றலையும் சரியான தீர்மானம் எடுக்கும் ஆற்றலையும் புத்திக்கூர்மையையும் அளவிடும் வகையில் இக்கேள்வித் தாள் அமையப் பெற்றிருக்கும். பல்வித மற்றும் சுருக்க விடையளித்தல் அமைப்பில் 50 கேள்விகளை உள்ளடக்கப்பட்டிருப்பதுடன் சகல கேள்விகளுக்கும் விடையளித்தல் வேண்டும்.

(v) தேர்ந்தெடுக்கும் முறை.- ஒவ்வொரு விடயத்திலும் தகுதி பெறுவதற்காக 50% புள்ளிகள் வீதம் அல்லது அதற்கு மேல் பெற்றிருத்தல் வேண்டும். இப்பரீட்சையில் இரு விடயங்களிலும் கூடிய புள்ளிகளை பெற்று சித்தி பெறும் விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து தராதரங்கள் பரிசீலனை செய்யப்படும். இந்நேர்முகப் பரீட்சையின் போது புள்ளிகள் ஏதும் வழங்கப்படமாட்டாது. விண்ணப்பம் கோரப்பட்ட சந்தர்ப்பத்தில் நிலவிய வெற்றிட தொகைக்கு ஏற்ப புகையிரத நிலைய அதிபர் - III ஆம் வகுப்பின் பதவிக்கு நியமிக்கப்படுவர். நியமிப்பு செய்வதற்காக விண்ணப்பதாரிகளை தேர்ந்தெடுப்பது மேலுள்ள 06 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள காரணிகளின்படி பரீட்சையில் கூடிய புள்ளிகளை பெற்றுள்ள திறமையின் வரிசைப்படியாகும்.

08. விண்ணப்பப் பத்திரம் தயாரிப்பதற்கும் பூரணப்படுத்துவதற்குமான அறிவுறுத்தல்கள் :

(i) விண்ணப்பப்பத்திரத்தை A-4 (தட்டச்சு கடதாசி) அளவுள்ள கடதாசியில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்படல் வேண்டும். (விண்ணப்பப் படிவத்தை தமது கையெழுத்தினால் பூரணப்படுத்தல் வேண்டும்.)
விண்ணப்பப் படிவத்தில்
1 ஆம் பக்கத்தில் 01 இலிருந்து 03 வரையிலான விடயங்களும்
2 ஆம் பக்கத்தில் 04 இலிருந்து 09 வரையிலான விடயங்களும்
3 ஆம் பக்கத்தில் 10 இலிருந்து 11 வரையிலான விடயங்களும்
4 ஆம் பக்கத்தில் 12 இலிருந்து 13 கையொப்பத்தை உறுதிப்படுத்தலும்
திணைக்கள/நிறுவன பிரதானியின் உறுதிப்படுத்துகையும் உள்ளடக்கப்படல் வேண்டும்.

மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு ஏற்ப தயாரிக்கப்படாத விண்ணப்பப் படிவங்களும், பூரணமற்ற வகையில் தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப் படிவங்களும் எவ் அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப் படிவத்தின் புகைப்பட பிரதி ஒன்றை வைத்துக்கொள்ளல் உமக்கு பிரயோசனப்படக் கூடியதாகவிருக்கும். மேலும், பூரணப்படுத்தும் விண்ணப்பப் படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு ஏற்படையதாவென்று விண்ணபதாரி உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். அவ்வாறு இல்லாத விடத்து விண்ணப்பப் படிவம் நிராகரிக்கப்படும். விண்ணப்பப் பத்திரத்தை தயாரிக்கும் போது தலைப்பில் கொடுக்கப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப் படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், குறிப்பிடப்படல் அவசியமாகும்.

(ii) குறிப்பிட்ட பரீட்சைக்கான பரீட்சைக் கட்டணம் ரூபா 600 ஆகும். அதை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 க்கு வரவிலிடும் வகையில் நாட்டின் எப்பாகத்திலேனும் அமைந்துள்ள தபால் அலுவலகத்தில் செலுத்த முடியுமாகும். அவ்வாறு செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை கழன்று விடாதவாறு அதன் ஒரு ஓரத்தை விண்ணப்பப்பத்திரத்துடன் ஒட்டி அனுப்புதல் வேண்டும். இப்பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியை இணைத்தல் மற்றும் வேறு வழிகளில் பணம் செலுத்துதல் விண்ணப்பப் பத்திரத்தை நிராகரிப்பதற்கு காரணமாக அமையும். பரீட்சைக் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் புகைப்பட பிரதியை தம்மிடம் வைத்துக்கொள்ளல் பிரயோசனமுடையதாக இருக்கும்.

(iii) விண்ணப்பப் பத்திரத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இலங்கை புகையிரத திணைக்களத்தின் புகையிரத நிலைய அதிபர் - III ஆம் தரத்திற்கு சேர்த்துக் கொள்ளும் திறந்த போட்டிப் பரீட்சை - 2019 (2020)" எனவும் நீர் பரீட்சைக்கு தோற்ற தேர்ந்தெடுத்த நகரத்தையும் அதன் இலக்கத்தையும் குறிப்பிடவும்.

(iv) வெளி விண்ணப்பதாரிகளின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் ; அரசாங்க பாடசாலையின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், பிரசித்த நொத்தாரிசு, முப்படைகளின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட பதவியை வகிக்கும் அல்லது அரசாங்க பதவியில் பதவிநிலை தரத்தை உடைய உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(v) தற்போது அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர்களின் கையொப்பம் தமக்கு கிட்டிய சேவைப் பிரதானியினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். இவர்களின் விண்ணப்பப் படிவம் திணைக்கள பிரதானியினூடாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

(vi) வர்த்தமானி அறிவித்தில் குறிப்பிடப்பட்டுள்ள தராதரங்களை கொண்டுள்ளவர்கள் மாத்திரம் குறிப்பிட்ட பரீட்சை கட்டணத்தை செலுத்தி பெறப்பட்ட பற்றுச்சீட்டுடன் சரியான முறையில் பூரணப்படுத்திய விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளரினால் பரீட்சை அனுமதிப் பத்திரம் அனுப்பி வைக்கப்படும்.

விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்பியதும் அது பற்றி பத்திரிகையிலும் பரீட்சைத் திணைக்களத்தின் இணையத்தளத்திலும் ஓர் அறிவித்தல் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் விடுக்கப்பட்டு 2 அல்லது 3 நாட்களுக்குள் பரீட்சை அனுமதி அட்டை கிடைக்கப்பெறாதவிடத்து அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் படி அது பற்றி இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். உம்மிடம் வைத்துக் கொண்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதியையும், கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் பிரதியையும், விண்ணப்பப் படிவம் தபாலிலிட்ட பற்றுச்சீட்டின் பிரதியையும் வைத்துக்கொண்டு விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், உமது முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் போன்றவற்றை குறிப்பிட்டு பரீட்சைத் திணைக்களத்திடம் கேட்டறியுமாறு தெரிவிப்பதுடன் கொழும்புக்கு வெளியில் உள்ள விண்ணப்பதாரியாயின் உமது மேற்குறிப்பிட்ட விபரங்களுடன் பரீட்சை அனுமதிப்பத்திரத்தின் பிரதியை பெக்ஸ் மூலம் பெற்றுக்கொள்வதற்கான உமது பெக்ஸ் இலக்கத்தையும் குறிப்பிட்டு வேண்டுகோள் கடிதமொன்றை இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கு பெக்ஸ் மூலம் அனுப்பி விசாரித்தறிதல் பயனுடையதாக இருக்கும்.

(vii) பரீட்சை விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கு முன்பு தமது பிரவேசப் பத்திரத்தில் கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். பரீட்சைக்கு தோற்றும் முதல் நாளில் பரீட்சை மேற்பார்வையாளரிடம் தனது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதி அட்டையை முன்வைக்க வேண்டியதுடன், அவ்வாறில்லாதவிடத்து பரீட்சைக்கு தோற்ற இடமளிக்கப்படமாட்டாது.

(viii) இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் பரீட்சைகளின் போது விண்ணப்பதாரியின் ஆள் அடையாளத்தை பரீட்சை மேற்பார்வையாளரிடம் உறுதிப்படுத்துவதற்காக ஆட்பதிவு திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள ஆள் அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச் சீட்டு அல்லது செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரம் ஆகியவை மாத்திரம் ஆகியவை ஏற்றுக்கொள்ளப்படும்.

(ix) போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்காக அனுமதி அட்டை வழங்கப்படல் இப்பதவிக்கான பரீட்சைக்கு தோற்றுவதற்கான தராதரங்களை பெற்றுள்ளதாகவோ விண்ணப்பதாரி பதவிக்கான தகுதியை பெற்றுள்ளதாகவோ கருதப்படமாட்டாது.

(x) பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளரினால் விடுக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சை விண்ணப்பதாரிகள் உட்பட்டவர்களாவர். அச்சட்டதிட்டங்களை மீறுகின்ற போது பரீட்சை ஆணையாளரினால் விடுக்கப்படும் தண்டனைக்கு உட்பட நேரிடும். வர்த்தமானி அறிவித்தலின் 7.v பந்தியின் படி எழுத்துமூல போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகளின் முழுப் புள்ளிகளின் திறமையின் வரிசைப்படி தயாரிக்கப்பட்ட பெறுபேறுகள் ஆவணமொன்று புகையிரத பொது முகாமையாளருக்கு கிடைக்கப் பெறும். பெறுபேறுகள் ஆவணத்திற்குள் உள்ளடக்கப்படவேண்டிய சித்தியடைந்த விண்ணப்பதாரிகளின் தொகையையும் நிகழும் வெற்றிடத்திற்கு ஏற்ப புகையிரத பொது முகாமையாளரின் வேண்டுகோளுக்கு ஏற்ப தீர்மானிக்கப்படும். பரீட்சைக்கு தோற்றும் சகல விண்ணப்பதாரிகளுக்கும் தனிப் பட்ட முறையில் பெறுபேறுகள் வழங்குதல் அல்லது இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் www.results.exam.gov.lk வலையத்தின் ஊடாக பிரசித்தப்படுத்தல் பரீட்சைத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும்.

09. **சேவை நிபந்தனை**.- III ஆம் வகுப்பு புகையிரத நிலைய அதிபர் தரத்தின் பதவிக்கு சேர்த்துக் கொள்ளப்படும் உத்தியோகத்தர்கள் 03 வருட கால தகுதிகாண் காலவெல்லைக்கு உட்படுவர். III ஆம் வகுப்பு புகையிரத நிலைய அதிபர் தரத்தின் பதவிக்கு சேர்த்துக் கொள்ளப்பட்ட தினத்திலிருந்து 03 வருட காலத்திற்குள் முதலாவது வினைத்திறமைகாண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். தகுதிகாண் காலவெல்லைக்குள் புகையிரத பயிற்சி பாடசாலையில் 06 மாத காலம் புகையிரத

நிலைய அதிபர் சேவையின் சட்டதிட்டங்களும் தொழில்சார் பயிற்சிகளும் வழங்கப்படும். பயிற்சியின் இறுதியில் புகையிரத பொது முகாமையாளரினால் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தி பெறல் வேண்டும்.

10. **சேவையில் ஈடுபடுத்தும் நிபந்தனை.-**

(i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உரித்துடையதுமாகும். தற்போதே விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டுள்ளவர்கள் மேலும் அதற்காக சந்தாப் பணம் செலுத்துதல் வேண்டும்.

(ii) அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 07/2007 இன் ஏற்பாட்டின் படி அரசாங்க சேவைக்கு சேர்ந்த மொழியை தவிர்ந்த மற்றைய அரச கரும மொழித் தேர்ச்சியை 05 வருட காலத்திற்குள் பெறல் வேண்டும். அத்தேர்ச்சியை பெறாத உத்தியோகத்தர்களின் சம்பள ஏற்றம் தேர்ச்சி பெறும் வரை மறுக்கப்படும்.

(iii) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் தாபன விதிக்கோவையினதும், நிதிப்பிரமாணத்தினதும் ஏற்பாடு களுக்கும் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள தாபன செயற்பாட்டு அமைப்பு நியதிகள் கோவையின் ஏற்பாடுகளுக்கும், கீழ்ப்பட்டு செயற்படல் வேண்டும். மற்றும் அடிக்கடி அரசாங்கத்தினால் விடுக்கப்படும் கட்டளைகளுக்கும் திணைக்கள உபதேசங்களுக்கும் கீழ்ப்பட்டு செயற்படல் வேண்டும்.

11. சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலம் பிரசுரிக்கப்படும் இவ்வறிவித்தலில் மொழி கருத்துகளுக்கிடையில் ஏதேனும் ஒற்றுமையின்மை அல்லது பொருந்தா தன்மை அல்லது வேறுபாடுகள் உள்ளதாக தெரியவருமிடத்து அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தலின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

எம். ஜே. டீ. பிரனாந்து,
புகையிரத பொதுமுகாமையாளர்.

இலங்கை புகையிரத பொது முகாமையாளர் அலுவலகம்,
கொழும்பு - 10,
2020, யூலை 03.

(இதன்படி ஏ4 கடதாசியின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரித்துக் கொண்ட விண்ணப்பப் படிவத்தை பூரணப்படுத்துவதற்கு முன்பு விண்ணப்பம் கோரல் அறிவித்தலை நன்றாக வாசித்து புரிந்து கொள்ளவும்.)

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| பரீட்சை மொழி மூலம் :<br>சிங்களம் - 2 ☐<br>தமிழ் - 3 ☐<br>(குறித்த இலக்கத்தை அடைப்புக்குள் எழுதவும். |
| பிரஜா உரிமை :<br>பரம்பரை மூலம் - 1<br>பதிவு மூலம் - 2 ☐<br>(குறித்த இலக்கத்தை அடைப்புக்குள் எழுதவும்.) |

☐
(அலுவலக உபயோகத்திற்காக)

| பரீட்சைக்கு தோற்ற விண்ணப்பிக்கும் நகரம் | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|
| 1 ஆவது விருப்பம் | | |
| 2 ஆவது விருப்பம் | | |
| பரீட்சை அறிவித்தலின் முதல் பந்தியை பார்க்கவும். விண்ணப்பிக்கும் நகரத்தை பின்பு மாற்ற இடமளிக்கப்படமாட்டாது | | |

**இலங்கைப் புகையிரதத் திணைக்களத்தின் புகையிரத நிலைய அதிபர் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2019 (2020)**

**OPEN COMPETITIVE EXAMINATION FOR RECRUITMENT TO THE POST OF STATION MASTER GRADE - III IN SRI LANKA RAILWAY DEPARTMENT - 2019 (2020)**

01. முழுப்பெயர்

(i) சிங்களத்தில்/தமிழில் :----.

(ii) ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

(உதாரணம் : HERATH MUDIYANSELAGE PIYAL SILVA)

02. நிரந்தர முகவரி:
(i) சிங்களத்தில்/தமிழில் :----.
(ii) ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில் :----.

03. ஆண்/பெண் :
பெண்- 1
ஆண் - 0 ☐

(குறித்த இலக்கத்தை அடைப்புக்குள் எழுதவும்)

04. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

05. கையடக்கத் தொலைபேசி இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

06. இனத் தொகுதி சிங்களம் - 1/இலங்கை தமிழ் - 2/இந்திய தமிழ் - 3/முஸ்லிம் - 4/பறங்கியர் - 5/மலாயர் - 6:

☐
(குறித்த இலக்கத்தை அடைப்புக்குள் எழுதவும்)

07. வதிவிடம் :
(i) கிராம அலுவலர் பிரிவு :----- அதன் இலக்கம் ☐
(ii) பிரதேச செயலாளர் பிரிவு :-----
(iii) மாவட்டம் :------

08 பிறந்த திகதி :

ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

2020.08.31 ஆந் திகதிக்கு வயது :

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

09. கல்வித் தராதரம் :
(i) க. பொ. த. (சாதாரண தரம்) சுட்டெண்

| தொ. இல. | விடயம் | தரம் |
|---|---|---|
| i. | | |
| ii. | | |
| iii. | | |
| iv. | | |

| தொ. இல. | விடயம் | தரம் |
|---|---|---|
| v. | | |
| vi. | | |
| vii. | | |
| viii. | | |

(ii) க. பொ. த. (உயர் தரம்) சுட்டெண்:............... வருடம் :.....................

| தொ. இல. | விடயம் | தரம் |
|---|---|---|
| i. | | |
| ii. | | |
| iii. | | |
| iv. | | |

10. நீர் எப்போதாவது ஏதேனும் குற்றத்தின் நிமித்தம் நீதிமன்றத்தின் மூலம் குற்றவாளியாக கருதப்பட்டுள்ளீரா? (குறித்த அடைப்புக்குள் X அடையாளமிடவும்) :----.

ஆம் ☐ இல்லை ☐

11. விண்ணப்பதாரியின் உறுதிப்படுத்துகை :-

(அ) இவ் விண்ணப்பப் படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த வகையில் உண்மையானதெனவும், சரியானதெனவும் தெரிவித்துக் கொள்கிறேன். இதில் ஏதேனும் பகுதிகள் பூரணப்படுத்தப்படாததால்/ அல்லது/ உடன் பிழையான முறையில் அல்லது/ உடன் பொய்யான முறையில் பூரணப்படுத்தப்பட்டிருப்பின் எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதையும் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட தன் பின்பு மேற்குறிப்பிட்ட விடயம் தெரியவருமிடத்து பதவிக்கான நியமனம் இரத்துச் செய்யப்படும் என்பதையும் நான் நன்கறிவேன். அதன் மூலம் ஏற்க நேரும் நஷ்டத்தையும் நான் தனிப்பட்ட முறையில் ஏற்றுக்கொள்வேன்.

(ஆ) மேலுள்ள (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானதாக, பதவிக்கு நியமிக்கப்பட்டதன் பின்பு தெரியவருமிடத்து பதவியலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன். அதன் மூலம் ஏற்க நேரும் நஷ்டத்தையும் நான் தனிப்பட்ட முறையில் ஏற்றுக்கொள்வேன்.

(இ) .................................. ஆந் திகதி ...................... தபால் அலுவலகத்தில் ரூபா 600.00 ஐ செலுத்தி பெற்றுக்கொண்ட இலக்கம் ............................. உடைய பற்றுச்சீட்டு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

| |
|---|
| பற்றுச்சீட்டின் ஒரு ஓரத்தை கழன்று விழாதவாறு ஒட்டவும்.<br>(பற்றுச்சீட்டின் புகைப்பட பிரதியை தம்மிடம் வைத்துக்கொள்ளவும்.) |

(ஈ) இப்பரீட்சையின் நிபந்தனைகளை கடைப்பிடிக்க இணங்குகின்றேன்.

(உ) மேலும் பரீட்சை நடாத்துதல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளரினால் விடுக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் கீழ்ப்படிவதாகவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

----
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

12. கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இவ்விண்ணப்பத்தை முன்வைக்கும்
திரு. ................................. அவர்களை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன். என்றும், அவர் ............................ ஆந் திகதி மேலுள்ள கையொப்பத்தை என் முன்னிலையில் இட்டார் எனவும் குறித்த பரீட்சை கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதுடன் அதன் பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதென்பதையும் உறுதிப்படுத்துகிறேன்.

----,
திகதி :----. விண்ணப்பதாரியின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(தயவு செய்து உத்தியோக இலட்சினையை பொறிக்கவும்.)

13. திணைக்கள/நிறுவன பிரதானியின் உறுதிப்படுத்துகை :

இவ்விண்ணப்பப் பத்திரத்தை முன்வைக்கும் திரு. ................................ அவர்கள் ................................ திணைக்களத்தில்/ நிறுவனத்தில் ..................................... ஆக சேவை புரிகிறார். அவருக்கு எதிராக முற்றுப் பெறாத ஒழுக்காற்று நடவடிக்கை உள்ளது/ இல்லை. அவரின் வேலை, நடத்தை, வேலைக்கு சமுகம் தரல் திருப்திகரமானது/ அதிருப்திகரமானது. குறித்த பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதுடன் அதன் பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டுள்ளது. இவர் புகையிரத நிலைய அதிபர் III ஆம் தரத்திற்கு தேர்ந்தெடுக்கப்படுமிடத்து இத்திணைக்களத்திலிருந்து/ நிறுவனத்திலிருந்து விடுவிப்புச் செய்ய முடியும்/ முடியாதென தெரிவித்துக்கொள்கிறேன். (பொருத்தமற்ற வசனங்களை கீறிவிடவும்.)

----,
திணைக்களம்/நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

திகதி :----.

உறுதிப்படுத்துபவரின் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(துயவு செய்து உத்தியோக இலட்சினையை பொறிக்கவும்.)

07-882

---

## பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

## *கிராம அலுவலர் சேவையின் II ஆம் வகுப்பின் அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2020*

1.0 கிராம அலுவலர் சேவையின் III ஆம் வகுப்பின் அலுவலர்களுக்கான, ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் ஏற்பாடுகளுக்கமைய, வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையானது, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2020 ஆம் ஆண்டு கார்த்திகை மாதத்தில் நடாத்தப்படுமென்றும், அதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகிறதென்றும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2.0 கிராம அலுவலர் சேவையின் II ஆம் வகுப்பின் அலுவலர்களுக்கான இப்பரீட்சையானது கொழும்பு, கண்டி, காலி, மாத்தறை, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, குருநாகல், அனுராதபுரம், பதுளை, இரத்தினபுரி மற்றும் கிளிநொச்சி ஆகிய நகரங்களில் நடைபெறும். இந்நகரங்களும் நகர இலக்கங்களும் கீழே காட்டப்பட்டுள்ளன. விண்ணப்பப்படிவத்தில் இந்நகரங்களும் நகர இலக்கங்களும் அவை குறிப்பிடப்பட்டுள்ள உரிய கூட்டில் நிரப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பிக்கப்பட்ட நகரமும்/ நகரங்களும் பின்னர் மாற்றப்படுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. மேற்குறிப்பிடப்பட்ட ஏதேனும் ஒரு நிலையத்திற்குப் போதியளவு விண்ணப்பதாரிகள் தொகை இல்லாதுவிடின், அந்நிலையம் இரத்துச் செய்யப்பட்டு, அதற்கு அண்மித்த நிலையமொன்றுக்கு உரிய விண்ணப்பதாரர்கள் அனுப்பப்படுவர்.

மேலும் தீர்மானிக்கப்பட்ட அனைத்து நகரங்களிலோ அல்லது கூடுதலான எண்ணிக்கையிலோ அல்லது பரீட்சை நிலையங்களை ஸ்தாபித்தல் தொடர்பாக போதுமானளவு எண்ணிக்கையிலான விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்காதவிடத்து கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் பரீட்சை நடாத்துவதற்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கண்டி | 02 |
| காலி | 03 |
| மாத்தறை | 04 |
| யாழ்ப்பாணம் | 05 |

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| மன்னார் | 06 |
| முல்லைத்தீவு | 07 |
| திருகோணமலை | 08 |
| மட்டக்களப்பு | 09 |
| குருநாகல் | 10 |
| அநுராதபுரம் | 11 |
| பதுளை | 12 |
| இரத்தினபுரி | 13 |
| கிளிநொச்சி | 14 |

பிரதேச செயலகம் மற்றும் அது அமைந்துள்ள மாவட்டம் தொடர்பான தகவல்கள் I ஆம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. விண்ணப்பதாரர்கள் தாம் கோருகின்ற பிரதேச செயலகம் மற்றும் அதன் இலக்கம், மாவட்டம் மற்றும் அதன் இலக்கம் அவ் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு சரியாக விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் குறிப்பிடுதல் வேண்டும். அதனைப் பின்னர் மாறுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. அவ்விபரங்களை பிழையாக குறிப்பிடுதல் காரணமாக விண்ணப்பதாரருக்கு ஏற்படுகின்ற எந்தவொரு நட்டம் தொடர்பாகவும் முன்வைக்கப்படுகின்ற கோரிக்கைகள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாதென்பதுடன் பிரதேச செயலகம் மற்றும் அதன் இலக்கம் குறிப்பிடப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

3.0 (i) இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுவதுடன், பரீட்சையினை நடாத்துவது தொடர்பாக அவரால் விதிக்கப்பட்ட சட்டதிட்டங்களுக்குப் பரீட்சார்த்திகள் கட்டுப்படுவர்.

(ii) பரீட்சார்த்திகளுக்கு விதிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்கள், வர்த்தமானி அறிவித்தலில் தனியாக அச்சிடப்பட்டுள்ளன. இச்சட்டதிட்டங்கள் மீறப்படின், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனையொன்றுக்கு அவர்கள் உள்ளாக வேண்டி வரும்.

4.0 **தகைமைகள்**.- 2010.09.29 ஆந் திகதி தொடக்கம் அமுலில் உள்ள கிராம அலுவலர் ஆட்சேர்ப்பு நடைமுறையின்படி, கிராம அலுவலர் சேவையின் II ஆம் வகுப்புக்கு ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்ட அலுவலர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகைமை பெறுவர்.

5.0 **பரீட்சை நடைமுறை**.- விண்ணப்பதாரிகள் கீழே காட்டப்பட்டுள்ள பாடங்கள் உள்ளடக்கப்பட்ட எழுத்துப் பரீட்சையொன்றுக்குத் தோற்றுதல் வேண்டும் :

| | விடயம் | புள்ளிகள் | நேரம் | விடய இலக்கம் |
|---|---|---|---|---|
| 1. | தாபன விதிக்கோவை மற்றும் நடைமுறைவிதிகள் | 100 | 1 1/2 மணி | 1 |
| 2. | விடயம் தொடர்பான கற்கையும் தொழில்சார் அறிவும் | 100 | 1 1/2 மணி | 2 |

5.1 **தாபன விதிக்கோவை மற்றும் நடைமுறைவிதிகள் :**

***அலுவலக முறைகள்.-*** அரசாங்க அலுவலகங்களிலும் கிராம அலுவலர் அலுவலகங்களிலும் உபயோகிக்கப்படும் அலுவலக முறைகள் பற்றிய அறிவு மற்றும் அவ்வறிவை நடைமுறையில் பயன்படுத்தத்தக்க ஆற்றல் என்பன இதன்போது அளவிடப்பட எதிர்பார்க்கப்படுகின்றது.

***தாபன நடவடிக்கைகள் மற்றும் நடைமுறை விதிகள்.-*** அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் மற்றும் தாபன விதிக்கோவையின் VII, IX, XI, XII, XIV, XV, XVI, XVII, XXI, XXII, XXIII, XXIV, XXV, XXVI, XXVII, XXVIII, XXIX, XXX, XXXI, XXXII, XXXIII ஆகிய அத்தியாயங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் தற்போது நடைமுறையிலுள்ள அரசாங்க நிர்வாக மற்றும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழு சுற்றறிக்கைகள் தொடர்பாக அலுவலர் கொண்டுள்ள அறிவும் விளக்கமும் பரிசோதித்துப் பார்க்கப்படும்.

இவ்வினாப்பத்திரம் இரு பகுதிகளைக் கொண்டது :

I ஆம் பகுதி.- பல்தேர்வு வினாப்பத்திரம். காலம் : 30 நிமிடங்கள் - (25 புள்ளிகள்)

II ஆம் பகுதி.- மூன்று வினாக்களைக் கொண்ட அரைவாசி கட்டமைக்கப்பட்ட கட்டுரை வடிவிலான வினாப்பத்திரமாகும். மூன்று வினாக்களுக்கும் விடை அளித்தல் வேண்டும். காலம் : 01 மணித்தியாலம் - (75 புள்ளிகள்)

5.2 ***விடயம் தொடர்பான கற்கையும் தொழில்சார் அறிவும்.***- கிராம அலுவலர்களுக்கு உரிய பல்வேறு சட்டதிட்டங்கள், அமைச்சு, திணைக்களங்கள் மற்றும் மாகாண சபைகள், வேறு நியதிச்சட்ட நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டுள்ள கடமைகள் தொடர்பான அறிவு பரீட்சிக்கப்படுவதுடன், அவ்விடயத்துடன் தொடர்பான சம்பவங்கள் பற்றிய விடய ஆய்வும் உள்ளடக்கப்படும்.

I ஆம் பகுதி.- பல்தேர்வு வினாப்பத்திரம் - காலம் : 30 நிமிடங்கள் - (25 புள்ளிகள்)

II ஆம் பகுதி.- மூன்று வினாக்களைக் கொண்ட அரைவாசி கட்டமைக்கப்பட்ட கட்டுரை வடிவிலான வினாப்பத்திரமாகும். மூன்று வினாக்களுக்கும் பதில் அளித்தல் வேண்டும். காலம் : 01 மணித்தியாலம் - (75 புள்ளிகள்)

6.0 சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் மாத்திரம் இப்பரீட்சை நடைபெறுவதுடன், இச்சேவையில் சேர்வதற்கான பரீட்சைக்குத் தோற்றிய மொழியில் அல்லது அரச கரும மொழியில் அலுவலர்கள் இப்பரீட்சைக்குத் தோற்ற முடியும். போட்டிப் பரீட்சை இன்றி சேவையில் சேர்ந்த அலுவலர்கள் தாம் கல்வி கற்ற மொழி மூலம் அல்லது அரசகரும மொழி மூலம் இப்பரீட்சைக்குத் தோற்ற முடியும். பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் மொழி மூலம் பின்னர் மாற்றப்படுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

7.0 தாம் விரும்பினால் ஒவ்வொரு பாடத்திற்கும் வெவ்வேறாகவும், ஒன்றுக்கொன்று வித்தியாசமான அமர்வுகளில் அலுவலர்கள் பரீட்சைக்குத் தோற்ற முடியும். எனினும், சித்தியடைவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கும் விதிக்கப்பட்ட மொத்தப் புள்ளிகளில் ஆகக் குறைந்தது நாற்பது வீதம் (40%) என்ற வகையில் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். எல்லாப் பாடங்களிலும் சித்திபெற்று, பரீட்சை பூரணத்துவப்படுத்தப்படும் ஆண்டில் பரீட்சை நடாத்தப்பட்ட இறுதி நாள், இவ்வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை சித்தியடைந்த நாளாகக் கருதப்படும்.

8.0 பரீட்சை முடிவுகள், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் எனக்கு வழங்கப்படுவதுடன், பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் பெயர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் ஊடாக விண்ணப்பதாரர்களுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

9.0 விண்ணப்பப்பத்திரமானது இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்துடன் ஒத்ததாக இருத்தல் வேண்டும். அந்த மாதிரி விண்ணப்பப்படிவத்தின்படி விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பப்படிவத்தைத் தயார் செய்து கொள்ள வேண்டியதுடன், அதன்படி தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை, விண்ணப்பதாரர்களினால் தமது சேவைப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதேச செயலாளர் ஊடாக 2020, ஆவணி 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர், "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு (திணைக்களம் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள்) கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு" எனும் முகவரிக்குப் பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். பரீட்சை ஆணையாளர் நாயகத்துக்குச் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப்படிவங்கள் அடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில், பரீட்சையின் பெயர் குறிப்பிடப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதிக்குப் பின் கிடைக்கும் விண்ணப்பங்களும் உரிய விபரங்கள் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

10.0 **பரீட்சார்த்திகளின் ஆள் அடையாளம்.**- பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தோற்றும் எல்லாப் பாடங்களின்போதும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்தியடையக்கூடிய விதத்தில் தனது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களில் ஒன்றைப் பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும் :

(i) தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;
(iii) செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

அத்தோடு பரீட்சார்த்தியின் ஆளடையாளத்தினை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக முகம் மற்றும் காதினை மூடாத வண்ணம் பரீட்சை நிலையத்திற்குள் செல்ல வேண்டும். தனது ஆளடையாளத்தினை உறுதிப்படுத்திக்கொள்ள முடியாத பரீட்சார்த்திகள் பரீட்சை நிலையத்தில் உள் நுழைய அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும், உள் நுழையப்பட்ட விண்ணப்பதாரர்களை அடையாளம் கண்டு கொள்ளும் வகையில் மூடாத வண்ணம் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

11.0 **விண்ணப்பங்கள்**. - மாதிரி விண்ணப்பப்படிவத்தில் 1.0 தொடக்கம் 6.0 வரையான பந்திகள் முதலாம் பக்கத்திலும், 7.0 தொடக்கம் ஏனையவை அனைத்தும் இரண்டாம் பக்கத்திலும் உள்ளடக்கப்படும் விதத்தில் 'A4' அளவிலான தாளொன்றில் விண்ணப்பப்பத்திரம் தயாரிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பப்பத்திரம் தட்டச்சு மூலம் தயாரிக்கப்பட முடியுமெனினும், அது சரியாகவும் தெளிவாகவும் விண்ணப்பதாரியின் கையெழுத்து மூலமே நிரப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவம் இத்துடனுள்ள மாதிரியின்படியே தயாரிக்கப்பட வேண்டியதுடன், ஒரு விண்ணப்பதாரர் ஒரு விண்ணப்பத்தை மட்டுமே சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன், விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியை அனுப்ப வேண்டாமென அறிவிக்கப்படுகின்றது. மாதிரி விண்ணப்பப்படிவத்துடன் ஒத்திணையாத மற்றும் முழுமையற்ற விதத்தில் தகவல் குறிக்கப்பட்டுள்ள விண்ணப்பப்பத்திரங்கள், அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். பரீட்சை விண்ணப்பப்படிவத்தின் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர், சிங்கள விண்ணப்பப்பத்திரங்களில் சிங்களத்துக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படுதல் வேண்டும். மேலும், பூரணப்படுத்தப்படும் விண்ணப்பப்பத்திரம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துடன் ஒத்து இணங்கியுள்ளதா என்பதனையிட்டு விண்ணப்பதாரர் நன்றாக விசாரித்தறிய வேண்டியதுடன், அவ்விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதியொன்றைத் தம்மிடம் வைத்துக்கொள்வது பயனுடையதாக இருக்கும்.

12.0 முதற் தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள், எவ்வித பரீட்சைக் கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை. எனினும், அதன் பின்னரான பரீட்சைகளின்போது அலுவலர்களினால் ஒரே முறையில் முழுப் பரீட்சைக்கும் தோற்றுவதெனின், பரீட்சைக் கட்டணம் 500 ரூபாவும், ஒரு பாடத்துக்கு மட்டும் தோற்றுவதெனின் 250 ரூபாவும் செலுத்தப்படல் வேண்டும். இப்பரீட்சைக் கட்டணம், பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இல் வரவு வைக்கப்படக்கூடிய விதமாக, நாட்டில் அமைந்துள்ள எந்தவொரு மாவட்ட அல்லது பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் செலுத்திப் பெறப்பட்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் ஒட்டுதல் வேண்டும். மேலும் ஒரு நிழற்படப் பிரதியைத் தம்மிடம் வைத்துக் கொள்ளுதல் பயனுடையதாக இருக்கும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது. இப்பரீட்சைக்காகச் செலுத்தப்படும் கட்டணத்தை வேறு எந்தப் பரீட்சைக்காகவும் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

13.0 அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் மட்டுமே பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ளார்கள் எனக் கருதி விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர், பரீட்சைக் கட்டணம் செலுத்தி உரிய பற்றுச்சீட்டுடன் சரியாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்துள்ள அலுவலர்களுக்குப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால், பரீட்சை நேர அட்டவணைப் பிரதியொன்றுடன், பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். விண்ணப்பதாரர் ஒருவருக்குப் பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்குதல், அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் எனக் கருதக்கூடாது. பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்களினால் பரீட்சை மண்டப அதிகாரியிடம் அவர்களது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதிப்பத்திரத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய அனுமதிப்பத்திரம் இன்றிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. விண்ணப்பதாரர்களுக்கு அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டதுடன், அது தொடர்பான பத்திரிகை அறிவித்தலொன்று பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு இரண்டு அல்லது மூன்று நாட்கள் கழிந்த பின்னரும் அனுமதிப்பத்திரம் கிடைக்கவில்லையெனின், அறிவித்தலில் கூறப்பட்ட விதத்தில் அதனையிட்டு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் "ஒழுங்கமைப்பு (திணைக்களம் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள்) கிளைக்கு அறிவித்தல் வேண்டும். தங்களால் வைத்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பப்பத்திரத்தினதும், பணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியினதும், பதிவு செய்யப்பட்ட சீட்டினதும் கொழும்புக்கு வெளியே உள்ள பிரதேசமொன்றெனின் அனுமதிப்பத்திரத்தை அனுப்புவதற்காகத் தொலைநகல் இலக்கமொன்றையும் குறிப்பிட்டுத் தங்களது கோரிக்கைக் கடிதத்தினை, அதன் பிரதியையும் தங்களிடம் வைத்துக்கொண்டு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்புவது மிகவும் பொருத்தமாக இருக்கும்.

14.0 பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் உள்ள அலுவலர்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முடியுமான வகையில் திணைக்களத் தலைவர்களினால் விடுமுறை வழங்கப்படுதல் வேண்டும். பயணச் செலவு வழங்கப்படமாட்டாது.

15.0 பரீட்சை நடாத்துவது மற்றும் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கு விண்ணப்பதாரர்கள் கட்டுப்படுவர். அச்சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற தண்டனைக்கு உள்ளாக வேண்டி ஏற்படுவதுடன், இப்பரீட்சையின் ஒழுங்கு விதிகளுக்கு அமைய எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமையுடையவர் அல்லர் எனத் தெரியவரும் பட்சத்தில், பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது அல்லது அதற்குப் பின்னர் போன்ற எச்சந்தர்ப்பத்திலும் அவரது

பரீட்சார்த்த நிலை இரத்துச் செய்யப்படும். இப்பரீட்சை அறிவித்தல் மூலம் ஏற்பாடுகள் செய்யப்பட்டிராத, இப்பரீட்சையுடன் தொடர்புடைய எந்தவொரு விடயம் பற்றியும் எனது தீர்மானம் இறுதித் தீர்மானமாக அமையும்.

16.0 சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பிரசுரிக்கப்பட்டுள்ள இவ்வறிவித்தலிலுள்ள வாசகங்களிடையே ஏதேனும் வேறுபாடு அல்லது கருத்து மயக்கம் காணப்படுமாயின் அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூல அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நடவடிக்கை எடுக்கப்படும்.

ஜே. ஜே. ரத்னசிறி,
செயலாளர்,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,
நில மெதுர,
எல்விட்டிகல மாவத்தை,
கொழும்பு 5,
2020, யூலை 21.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

(அலுவலக பாவனைக்கு மட்டும்)

**கிராம அலுவலர் சேவையின் II ஆம் தரத்தின் அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை - 2020**

EFFICIENCY BAR EXAMINATION FOR OFFICERS IN CLASS II OF GRAMA NILADHARI SERVICE - 2020

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :

சிங்களம் - 2
தமிழ் - 3

(உரிய இலக்கத்தைக் கூண்டினுள் எழுதவும். இதனை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.)

| | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |

(வர்த்தமானி அறிவித்தலின் 2.0 அத்தியாயத்திற்கு அமைய தாங்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் நகரத்தினை விருப்பத்தின் அடிப்படையில் குறிப்பிடுக.)

---

1.0 1.1 முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

(உதாரணம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDANA)

1.2 இறுதியில் இடுகின்ற பெயரை முன்னராகவும் மற்றைய பெயர்களது முதலெழுத்துக்களைப் பின்னராகவும் இட்டு பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

(உதாரணம் : GUNAWARDANA, H. M. S. K.)

1.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2.0 2.1 பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்பப்பட வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

2.2 உரிய மாவட்டம் மற்றும் மாவட்ட இலக்கம் :----------

(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) (அட்டவணை 1 இன் படி விண்ணப்பிக்கவும்) :----.

2.3 உரிய பிரதேச செயலகம் மற்றும் பிரதேச செயலக இலக்கம் :------.

(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) (அட்டவணை 1 இன் படி விண்ணப்பிக்கவும்) :----.

2.4 உரிய மாவட்டம் மற்றும் பிரதேச செயலகம் (சிங்களத்தில்/ தமிழில்) :------.

3.0 3.1 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | | | |

3.2 ஆண்/ பெண் : பெண் - 1
ஆண் - 0 | |

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக)

3.3 பிறந்த திகதி :-

ஆண்டு | | | | | மாதம் | | | திகதி | | |

3.4 கையடக்க தொலைபேசி இலக்கம் : | | | | | | | | | | |

4.0 தாங்கள் இம்முறை பரீட்சைக்குத் தோற்றும் பாடம்/பாடங்கள் (வர்த்தமானி அறிவித்தலின் 05 ஆம் பந்தியைப் பார்க்கவும்):

| தொடர் இலக்கம் | பாடம் | பாட இலக்கம் |
|---|---|---|
| 01 | | |
| 02 | | |
| 03 | | |

5.0

5.1 உரித்தாகும் தரம் :----.

5.2 பதவி :----.

5.3 உரிய தரத்திற்கு பதவியுயர்வு பெற்ற திகதி :----.

6.0 **கவனிக்க**.- வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளவாறு பரீட்சைக் கட்டணத்திற்காக உரிய பணம் செலுத்தப்பட்டதாக தபால் அலுவலகத்திலிருந்து விண்ணப்பதாரரின் பெயரிலேயே பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை இங்கு கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும் :

பற்றுச்சீட்டு இலக்கம் :----.
தபால் அலுவலகம் :----.
திகதி :----.
பணம் ரூபா :----.

7.0 மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தகவல்களும் சரியானது எனவும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எனக்கு உரிமை உள்ளதெனவும் வெளிப்படுத்துகின்றேன். மேலும் பரீட்சை நடாத்துவது தொடர்பாகப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கு நான் கட்டுப்படுவேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

-----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :----.

பிரதேச செயலாளரின் சான்றிதழ்

........................................ பிரதேச செயலகத்தில் ........................................ கிராம அலுவலர் பிரிவில் சேவையாற்றும் கிராம அலுவலர் திரு./ திருமதி/ செல்வி ........................................

(i) எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும்,

(ii) மேலே தரப்பட்ட விடயங்கள் பரிசீலிக்கப்பட்டன எனவும்,

(iii) அலுவலர் அப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியுள்ளவர் எனவும்,
(iv) உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது எனவும் உறுதிப்படுத்துகின்றேன். (பொருத்தமற்ற சொற்களை வெட்டிவிடவும்).

-----,
பிரதேச செயலாளரின் கையொப்பமும்,
பதவி முத்திரையும்.

பெயர்:----.
பதவிப் பெயர்:----
முகவரி :-----.
திகதி :-----.

**அட்டவணை I**

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| கொழும்பு | 1103 | கொழும்பு 0 1 |
| கொலன்னாவை | 1106 | |
| கடுவெல | 1109 | |
| ஹோமாகம | 1112 | |
| ஹங்வெல்ல | 1115 | |
| பாதுக்க | 1118 | |
| மகரகம | 1121 | |
| ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே | 1124 | |
| திம்பிரிகஸ்யாய | 1127 | |
| தெஹிவளை | 1130 | |
| இரத்மலானை | 1131 | |
| மொரட்டுவை | 1133 | |
| கெஸ்பாவ | 1136 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| நீர்கொழும்பு | 1203 | கம்பஹா 0 2 |
| கந்தான | 1206 | |
| திவுலப்பிட்டிய | 1209 | |
| மீரிகம | 1212 | |
| மினுவங்கொட | 1215 | |
| வத்தளை | 1218 | |
| ஜா-எல | 1221 | |
| கம்பஹா | 1224 | |
| அத்தனகல்ல | 1227 | |
| தொம்பே | 1230 | |
| மஹர | 1233 | |
| களனிய | 1236 | |
| பியகம | 1239 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| பாணந்துறை | 1303 | களுத்துறை 0 3 |
| பண்டாரகம | 1306 | |
| ஹொரண | 1309 | |
| இங்கிரிய | 1310 | |
| புலத்சிங்ஹள | 1312 | |
| மதுராவல | 1315 | |
| மிலனிய | 1318 | |
| களுத்துறை | 1321 | |
| பேருவளை | 1324 | |
| தொடங்கொட | 1327 | |
| மத்துகம | 1330 | |
| அகலவத்த | 1333 | |
| பாலிந்தநுவர | 1336 | |
| வளல்லாவிட்ட | 1339 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| தும்பனை | 2103 | கண்டி 0 4 |
| பூஜாபிட்டிய | 2106 | |
| அக்குறணை | 2109 | |
| பாத்ததும்பர | 2112 | |
| பன்னவல | 2115 | |
| உடதும்பர | 2118 | |
| மினிப்பை | 2121 | |
| மெததும்பர | 2124 | |
| குண்டசாலை | 2127 | |
| கங்கவட கோரளை | 2130 | |
| ஹாரிஸ்பத்துவ | 2133 | |
| ஹதரலியத்த | 2134 | |
| யட்டிநுவர | 2136 | |
| உடுநுவர | 2139 | |
| தொலுவ | 2142 | |
| பாத்தஹேவாஹெட்ட | 2145 | |
| தெல்தொட | 2148 | |
| உடபலாத்த | 2151 | |
| கங்கஇஹள கோரளை | 2154 | |
| பஸ்பாகே கோரளை | 2157 | |

| *பிரதேச செயலாளர் பிரிவு* | *பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம்* | *உரிய மாவட்டமும் இலக்கமும்* |
|---|---|---|
| கலேவெல | *2203* | மாத்தளை 0 5 |
| தம்புள்ள | *2206* | |
| நாஉல | *2209* | |
| பள்ளேபொல | *2212* | |
| யட்டவத்த | *2215* | |
| மாத்தளை | *2218* | |
| அம்பகஹ கோரளை | *2221* | |
| யக்கல பள்ளேகம | *2224* | |
| வில்கமுவ | *2227* | |
| ரத்தொட்ட | *2230* | |
| உக்குவல | *2233* | |

| *பிரதேச செயலாளர் பிரிவு* | *பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம்* | *உரிய மாவட்டமும் இலக்கமும்* |
|---|---|---|
| கொத்மலை | *2303* | நுவரெலியா 0 6 |
| ஹங்குரன்கெத்த | *2306* | |
| வலப்பனை | *2309* | |
| நுவரெலியா | *2312* | |
| அம்பகமுவ | *2315* | |

| *பிரதேச செயலாளர் பிரிவு* | *பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம்* | *உரிய மாவட்டமும் இலக்கமும்* |
|---|---|---|
| பெந்தோட்டை | *3103* | காலி 0 7 |
| பலபிட்டிய | *3106* | |
| கரந்தெனிய | *3109* | |
| எல்பிட்டி | *3112* | |
| நியாகம | *3115* | |
| தவலம | *3118* | |
| நெழுவ | *3121* | |
| நாகொடை | *3124* | |
| பத்தேகம | *3127* | |
| வெலிவிடிய-திவிதுர | *3130* | |
| அம்பலாங்கொடை | *3133* | |
| ஹிக்கடுவ | *3136* | |
| கடவத்ஸதர | *3139* | |
| போபே-போத்தல | *3142* | |
| அக்மீமன | *3145* | |
| யக்களமுல்ல | *3148* | |
| இமதுவ | *3151* | |
| கோனபீனுவல | *3154* | |
| ஹபரதுவ | *3157* | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| பிடபெத்தர | 3203 | மாத்தறை 0 8 |
| கோடபொல | 3206 | |
| பஸ்கொட | 3209 | |
| முலடியன | 3212 | |
| அதுரலிய | 3215 | |
| அகுரஸ்ய | 3218 | |
| வெலிப்பிட்டிய | 3221 | |
| மாலிம்பட | 3224 | |
| கம்புறுபிட்டிய | 3227 | |
| ஹக்மன | 3230 | |
| கிரிந்த புஹுல்வெல்ல | 3233 | |
| திஹகொட | 3236 | |
| வெலிகம | 3239 | |
| மாத்தறை | 3242 | |
| தெவிநுவர | 3245 | |
| திக்வெல்ல | 3248 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| சூரியவெவ | 3303 | அம்பாந்தோட்டை 0 9 |
| லுணுகம்வெஹெர | 3306 | |
| திஸ்ஸமகாராம | 3309 | |
| அம்பாந்தோட்டை | 3312 | |
| அம்பலந்தோட்டை | 3315 | |
| அங்குனுகொலபெலஸ்ஸ | 3318 | |
| வீரகெட்டிய | 3321 | |
| கடுவன | 3324 | |
| ஓகேவெவ | 3327 | |
| பெலியத்த | 3330 | |
| தங்கல்ல | 3333 | |
| வலஸ்முல்ல | 3336 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| ஊர்காவற்துறை (தீவகம் வடக்கு) | 4103 | யாழ்ப்பாணம் 10 |
| சங்கானை (வலிகாமம் மேற்கு) | 4106 | |
| சண்டிலிப்பாய் (வலிகாமம் தென்மேற்கு) | 4109 | |
| தெல்லிப்பளை (வலிகாமம் வடக்கு) | 4112 | |
| உடுவில் (வலிகாமம் தெற்கு) | 4115 | |
| கோப்பாய்(வலிகாமம் கிழக்கு) | 4118 | |
| கரவெட்டி(வடமராட்சி) | 4121 | |
| மருதங்கேணி (வடமராட்சி கிழக்கு) | 4124 | |
| பருத்தித்துறை (வடமராட்சி வடக்கு) | 4127 | |
| சாவகச்சேரி (தென்மராட்சி) | 4130 | |
| நல்லூர் | 4133 | |
| யாழ்ப்பாணம் | 4136 | |
| வேலனை (தீவகம் தெற்கு) | 4139 | |
| தீவுப்பகுதி | 4142 | |
| காரைநகர் | 4145 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| மன்னார் | 4203 | மன்னார் 11 |
| மாந்தை மேற்கு | 4206 | |
| மடு | 4209 | |
| நானாட்டான் | 4212 | |
| முசலி | 4215 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| வவுனியா வடக்கு | 4303 | வவுனியா 12 |
| வவுனியா தெற்கு | 4306 | |
| வவுனியா | 4309 | |
| வென்கலசெட்டிகுளம் | 4312 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| துணுக்காய் | 4403 | முல்லைத்தீவு 13 |
| மாந்தை கிழக்கு | 4406 | |
| புதுக்குடியிருப்பு | 4409 | |
| ஒட்டுசுட்டான் | 4412 | |
| கரைதுறைப்பற்று | 4415 | |
| வெலிஓய | 4418 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| பச்சிளைப்பள்ளி | 4503 | கிளிநொச்சி 1 4 |
| கண்டாவளை | 4506 | |
| கரைச்சி | 4509 | |
| பூநகரி | 4512 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| கோரளைப்பற்று வடக்கு | 5103 | மட்டக்களப்பு 1 5 |
| கோரளைப்பற்று மேற்கு (ஓட்டமாவடி) | 5106 | |
| கோரளைப்பற்று வாழைச்சேனை | 5109 | |
| ஏறாவூர் பற்று | 5112 | |
| ஏறாவூர் நகரம் | 5115 | |
| மண்முனை வடக்கு | 5118 | |
| மண்முனை மேற்கு | 5121 | |
| காத்தான்குடி | 5124 | |
| மண்முனைப்பற்று | 5127 | |
| மண்முனை தென்மேற்கு | 5130 | |
| போரதீவுப்பற்று | 5133 | |
| மண்முனை தெற்கு | 5136 | |
| கோரளைப்பற்று தெற்கு | 5139 | |
| கோரளைப்பற்று மத்தி | 5142 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| தெஹியத்த கண்டிய | 5203 | அம்பாறை 1 6 |
| பதியதலாவ | 5206 | |
| மாஓய | 5209 | |
| உஹன | 5212 | |
| அம்பாறை | 5215 | |
| நாவிதன்வெளி | 5216 | |
| சம்மாந்துறை | 5218 | |
| கல்முனை தமிழ் | 5224 | |
| சாய்ந்தமருது | 5225 | |
| காரைதீவு | 5227 | |
| நிந்தவூர் | 5230 | |
| அட்டாளைச்சேனை | 5233 | |
| இறக்காமம் | 5234 | |
| அக்கறைப்பற்று | 5236 | |
| ஆலையடிவேம்பு | 5239 | |
| தமன | 5242 | |
| திருக்கோவில் | 5245 | |
| பொத்துவில் | 5248 | |
| லாகுகல | 5251 | |
| கல்முனை முஸ்லீம் | 5254 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| | | |
| பதவிசிறிபுற | 5303 | திருகோணமலை 1 7 |
| குச்சவெளி | 5306 | |
| கோமரங்கடவெல | 5309 | |
| மொரவெவ | 5312 | |
| பட்டினமும் சூழலும் | 5315 | |
| தம்பலககாமம் | 5318 | |
| கந்தளாய் | 5321 | |
| கிண்ணியா | 5324 | |
| மூதூர் | 5327 | |
| சேருவில | 5330 | |
| வெருக்கல ஈச்சிலம்பத்துவ | 5333 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| கிரிபாவ | 6103 | குருநாகல் 1 8 |
| கல்கமுவ | 6106 | |
| எஹத்துவெவ | 6109 | |
| அம்பன்பொல | 6112 | |
| கொடவெஹெர | 6115 | |
| ரஸ்நாயக்கபுர | 6118 | |
| நிக்கவரட்டிய | 6121 | |
| மஹவ | 6124 | |
| பொல்பிதிகம | 6127 | |
| இப்பாகமுவ | 6130 | |
| கணேவத்த | 6133 | |
| வாறியபொல | 6136 | |
| கொபய்கணே | 6139 | |
| பிங்கிரிய | 6142 | |
| பமுணாகொடுவ | 6149 | |
| மாஸ்பொத | 6151 | |
| குருநாகல் | 6154 | |
| மல்லவபிட்டிய | 6157 | |
| மாவத்தகம | 6160 | |
| ரீதிகம | 6163 | |
| வீரம்புகெதர | 6166 | |
| குளியாப்பிட்டி கிழக்கு | 6169 | |
| குளியாப்பிட்டி மேற்கு | 6172 | |
| உடுபத்தாவ | 6175 | |
| பண்ணல | 6178 | |
| நாரம்மல | 6181 | |
| அளவ்வை | 6184 | |
| பொல்கஹவெல | 6187 | |
| பண்டுவஸ்நுவர கிழக்கு | 6190 | |
| பண்டுவஸ்நுவர மேற்கு | 6193 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| கற்பிட்டி | 6203 | புத்தளம் 1 9 |
| வனாதவில்லுவ | 6206 | |
| கருவலகஸ்வெவ | 6209 | |
| நவகத்தேகம | 6212 | |
| புத்தளம் | 6215 | |
| முந்தல் | 6218 | |
| மஹா கும்புக்கடவல | 6221 | |
| ஆனமடுவ | 6224 | |
| பள்ளம | 6227 | |
| ஆரச்சிகட்டுவ | 6230 | |
| சிலாபம் | 6233 | |
| மாதம்பை | 6236 | |
| மகாவெவ | 6239 | |
| நாத்தாண்டிய | 6242 | |
| வென்னப்புவை | 6245 | |
| தங்கொட்டுவ | 6248 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| பதவிய | 7103 | அநுராதபுரம் 2 0 |
| கெபிதிகொல்லாவ | 7106 | |
| மதவாச்சி | 7109 | |
| மஹவிலச்சிய | 7112 | |
| மத்திய நுவரகம் பளாத | 7115 | |
| ரம்பேவ | 7118 | |
| கஹடகஸ்திகிலிய | 7121 | |
| ஹொரவபொத்தான | 7124 | |
| கலென்பிந்துனுவெவ | 7127 | |
| மிஹிந்தலை | 7130 | |
| கிழக்கு நுவரகம் பளாத | 7133 | |
| நாச்சியதுவ | 7136 | |
| நொச்சியாகம | 7139 | |
| ராஜாங்கனை | 7142 | |
| தம்புத்தேகம | 7145 | |
| தலாவ | 7148 | |
| திரப்பனை | 7151 | |
| கெகிராவ | 7154 | |
| பளுகஸ்வெவ | 7157 | |
| இப்பலோகம | 7160 | |
| கல்னேவ | 7163 | |
| பலாகல | 7166 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| ஹிங்குரக்கொட | 7203 | பொலநறுவ 2 1 |
| மெதிரிகிரிய | 7206 | |
| லங்காபுர | 7209 | |
| வெலிகந்தை | 7210 | |
| திம்பலாகம | 7212 | |
| தமன்கடுவ | 7215 | |
| எலஹர | 7218 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| மகியங்கனை | 8103 | பதுளை 2 2 |
| ரீதிமாலியத்தை | 8106 | |
| மீகஹகிவுல | 8109 | |
| கன்தகெட்டிய | 8112 | |
| சொர்ணாதோட்டை | 8115 | |
| பசறை | 8118 | |
| லுனுகல | 8119 | |
| பதுளை | 8121 | |
| ஹாலி எல | 8124 | |
| ஊவா-பரணகம | 8127 | |
| வெலிமடை | 8130 | |
| பண்டாரவளை | 8133 | |
| எல்ல | 8136 | |
| அப்புத்தளை | 8139 | |
| ஹல்தும்முல்ல | 8142 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| பிபில | 8203 | மொனராகல 2 3 |
| மடுல்ல | 8206 | |
| மெதகம | 8209 | |
| சியம்பலாண்டுவ | 8212 | |
| மொனராகல | 8215 | |
| படல்கும்புர | 8218 | |
| புத்தல | 8221 | |
| வெள்ளவாய | 8224 | |
| கதிர்காமம் | 8227 | |
| தனமல்வில | 8230 | |
| செவனகல | 8233 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| எஹலியகொடை | 9103 | இரத்தினபுரி 2 4 |
| குருவிட்ட | 9106 | |
| கிரிஎல்ல | 9109 | |
| இரத்தினபுரி | 9112 | |
| இம்புல்பே | 9115 | |
| பலாங்கொடை | 9118 | |
| ஓபநாயக | 9121 | |
| பெல்மதுளை | 9124 | |
| எலபத்த | 9127 | |
| அயகம | 9130 | |
| கலவான | 9133 | |
| நிவிதிகல | 9136 | |
| கஹவத்த | 9139 | |
| கொடகவெல | 9142 | |
| வெலிகேபொல | 9145 | |
| எம்பிலிபிட்டிய | 9148 | |
| கொலன்ன | 9151 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| ரம்புக்கணை | 9203 | கேகாலை 2 5 |
| மாவனல்ல | 9206 | |
| அரணாயக்க | 9209 | |
| கேகாலை | 9212 | |
| கலிகமுவ | 9215 | |
| வரகாபொல | 9218 | |
| ருவன்வெல்ல | 9221 | |
| புளத்கொஹுபிட்டிய | 9224 | |
| யட்டியாந்தொட்டை | 9227 | |
| தெஹிவெத்தர | 9230 | |
| தெரணியகலை | 9233 | |

07-884

திருத்தம்

## பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

## முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2019 (2020)

*2020, யூலை மாதம் 17 ஆந் திகதிய 2185 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட "முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை- 2019 (2020)" தமிழ் மொழிமூலப் பரீட்சை அறிவித்தலின், 11.0 பரீட்சைக் கட்டணம் பந்தியின் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தப்படுகிறது.*

*11.0* **பரீட்சைக் கட்டணம்**.-

*"பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13"*

* *குறித்த வர்த்தமானி அறிவித்தலின் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்கள் அவ்வாறே வலுவிலிருக்கும்.*

*எஸ். ஆலோக்கபண்டார,*
*இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,*
*பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,*
*மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.*

*பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,*
*மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,*
*சுதந்திர சதுக்கம்,*
*கொழும்பு 7,*
*2020, யூலை 24.*

*07-889*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*